# 7. குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில் நிலை

1998இல் நடுவாண்டுக் குடித்தொகை 18.8 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. குடித்தொகை வளர்ச்சி வீதம் 1997 இல் 1.3 சதவீதமாக இருந்து 1.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை இது காட்டுகின்றது. குடித்தொகையின் இயற்கை அதிகரிப்பில் ஏற்பட்ட குறைப்பே இந்த வீழ்ச்சிக்கான காரணமாகும். 1998 இன் நடுவாண்டுக் குடித்தொகைக்கு மேலும் 222,000 ஆட்கள் கூட்டப்பட்டுள்ளனர். குடித்தொகை அடர்த்தி சதுரக் கிலோ மீற்றர் ஒன்றுக்கு 1997 இல் 296 ஆட்களாகவிருந்து 1998இல் 299 ஆட்களாக அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளை குடித்தொகை இடம் பெயர்வு, ஏனைய சமூகப் பொருளாதார நிலைமைகளின் முன்னேற்றத்துடன் இணைந்து பெரும்பாலான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைவிட குடித்தொகை வளர்ச்சி வீதத்தினை கணிசமான அளவுக்கு குறைந்துள்ள வேளையில் ஆண்டுதோறும் சேர்ந்துகொள்ளும் 200,000 த்திற்கும் அதிகமான குடித் தொகையானது மட்டுப்படுத்தப்பட்ட ஏனைய மூலவளங்களின் மீது சுமை ஒன்றினை தோற்றுவித்திருக்கிறது. கடந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு குடித்தொகையின் தற்போதைய அமைப்பு மற்றும் போக்குகளுடன் சமூகப் பொருளாதார பிரச்சனைகள் பல தொடர்புபட்டுள்ளன. தொழில் வாய்ப்பின்மை, காணி துண்டாடப்படல், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு போன்ற சமூக நலன்புரிப் பணிகளின் உயர் செலவினம் மற்றும் முதுமையடையும் குடித்தொகை என்பன தொடர்ந்துவரும் சில பாரிய பிரச்சனைகளாகவுள்ளன. முதுமையடையும் குடித் தொகை மற்றும் முதுமையடைவோர் அண்டியிருக்கும் விகிதத்தின் அதிகரிப்பு என்பன தொழில்புரியும் குடித் தொகையின் மீது அதிகளவு சுமையை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவும் வயது சென்ற காலத்தில் வாழ்க்கைத் தரங்கள் மோசமடைவதைத் தவிர்ப்பதற்கும் நன்கு திட்டமிடப்பட்ட உபாயம் ஒன்றும் நன்கு வடிவமைக்கப் பட சமூக பாதுகாப்பு முறையொன்றை வேண்டி நிற்கின்றது. மாறிவரும் தொழிற்சந்தை தேவைப்பாடு களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் தொழிற்சந்தை தேவைப்பாடுகளை எதிர் கொள்ளக் கூடிய வகையில் தொழிற்சந்தைகளை பெருமளவு நெகிழ்ச்சியுடைய தாகவும் பொருத்தமானதுமாக மாற்றுவதற்கும் வளர்ச்சி சார்ந்த ஏனைய கொள்கைகளை குறைநிரப்புவதற் காகவும் வடிவமைக்கப்பட்ட சூழல் ஒன்றில் இது மேற் கொள்ளப்படல் வேண்டும்.

அட்டவணை 7.1
குடித்தொகையின் அடிப்படைக் குறிகாட்டிகள்

| ஆண்டு | குடித் தொகை ('000) | ஆண்டு மாற்றம் (%) | செப்பமற்ற பிறப்பு வீதம் ('000ஆட்கள்) | செப்பமற்ற இறப்பு வீதம் ('000ஆட்கள்) |
|---|---|---|---|---|
| 1871 | 2,417 | 0.8 | 28.5 | 20.0 |
| 1946 | 6,657 | 1.5 | 35.4 | 14.3 |
| 1953 | 8,098 | 2.8 | 48.0 | 10.4 |
| 1963 | 10,582 | 2.7 | 34.1 | 8.5 |
| 1971 | 12,690 | 2.2 | 30.4 | 7.7 |
| 1981 | 14,847 | 1.7 | 28.2 | 5.9 |
| 1991 | 17,247 | 1.5 | 20.6 | 5.5 |
| 1995 | 18,136 | 1.4 | 18.9 | 5.8 |
| 1996 | 18,315 | 1.0 | 18.6 | 6.5 |
| 1997 | 18,552 | 1.3 | 17.9 | 6.1 |
| 1998(அ) | 18,774 | 1.2 | வி.கி. | வி.கி. |

மூலங்கள்: பதிவாளர் நாயகத் திணைக்களம்.
குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) தற்காலிகமானவை.

## 7.2 தொழிற்படை

1990ஆம் ஆண்டிலிருந்து தொகை மதிப்புப் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அளவீடுகளிலிருந்து பெறப்பட்ட காலாண்டு தொழிற்படைத் தரவுகளின் தொடர் ஒன்று கிடைக்கக் கூடியதாகவுள்ளது. இந்த அளவீட்டின்படி, 10 வயதுக்கும் அதற்கு மேற்பட்டதுமான பொருளாதார ரீதியான செயற்திறன் கொண்ட குடித்தொகையே தொழிற்படை என வரையறுக்கப்பட்டுள்ளது. 1998 இன் மூன்றாம் காலாண்டின் இறுதியில் தொழிற்படை 6.7 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1998இல் இந்தத் தொழிற்படை மதிப்பீடு முன்னைய மதிப்பீடுகளுடன் கடுமையாக ஒப்பிடத்தக்கதல்ல. ஏனெனில் இறுதியாக மேற் கொள்ளப்பட்ட அளவீட்டில் குடும்ப வருமான உருவாக்கல் செயற்பாடுகளுக்கு உதவி செய்யும் வீட்டுப் பணிப் பெண்கள் போன்ற சம்பளம் வழங்கப்படாத பெண் குடும்பத் தொழிலாளர்களும் தொழிற்படையில் விசேடமாக வேளாண்மைத்துறையில் உள்ளடக்கப் படுகின்றனர். ஆனால் இவர்கள் கடந்த ஆண்டுகளில் தொழிற்படையாகக் கணிக்கப்படவில்லை. தொழிற்படைப் பங்கேற்பு வீதம் அதாவது 10 வயதுக்கும் அதற்கு மேற்படவும் உள்ள குடும்ப அலகுகளின் வீதமொன்றாக 1998இன் மூன்றாம் காலாண்டில் தொழிற்படை 52 சதவீதமாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. 1990 ஆம் ஆண்டுக் காலப் பகுதியிலிருந்து தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 48 - 52 சதவீதமானதொரு வீச்சுக்குள் மாறுபட்டுக் காணப்பட்டது. தொழிற்படைப் பங்கேற்பில் 1997இன் 49 சதவீதத்திலிருந்து 1998இல் 52 சதவீதத்திற்கான அதிகரிப்பொன்று காணப்பட்ட வேளையில் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தின் அதிகரிப்பு தொழிற்படை உள்ளடக்கத்தின் மேம்பாடொன்றினைப் பிரதிபலிக்கின்றது. பெண் தொழிலாளர்கள் தொழிற்படையில் நுழைந்து கொள்ளும் வீதம் கூடிக் கொண்டு போதல் இந்த அதிகரிப்புக்கான பிரதான காரணமாகத் தென்படுகின்றது.

அட்டவணை 7.2
தொழிற்படை பங்கேற்பு

| ஆண்டு | | மொத்தத் தொழிற் படை('000 ஆட்கள்) | தொழிற்படை பங்கேற்பு வீதம் (%) (அ) | | |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | ஆண் | பெண் |
| 1990 | | 6,001 | 51.9 | 67.7 | 36.2 |
| 1993 | | 6,032 | 49.1 | 65.3 | 33.1 |
| 1994 | | 6,079 | 48.7 | 65.4 | 32.0 |
| 1995 | | 6,106 | 47.9 | 64.4 | 31.7 |
| 1996 | | 6,242 | 48.7 | 65.9 | 31.6 |
| 1997 | | 6,229 | 48.4 | 65.4 | 31.7 |
| 1997 | 1ஆம் காலாண்டு | 6,237 | 48.5 | 65.2 | 31.8 |
| | 2ஆம் காலாண்டு | 6,226 | 48.4 | 65.7 | 31.6 |
| | 3ஆம் காலாண்டு | 6,218 | 48.3 | 65.7 | 31.2 |
| | 4ஆம் காலாண்டு | 6,236 | 48.8 | 64.8 | 32.3 |
| 1998 (ஆ) | | 6,637 | 51.5 | 67.3 | 36.4 |
| | 1ஆம் காலாண்டு | 6,647 | 51.6 | 66.6 | 37.6 |
| | 2ஆம் காலாண்டு | 6,574 | 51.0 | 67.7 | 34.8 |
| | 3ஆம் காலாண்டு | 6,693 | 51.9 | 67.5 | 36.7 |

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) தொழிற்படை, பத்து வயதும் அதற்கு மேற்பட்ட குடியிருப்பாளர் குடித் தொகையின் சதவீதமாக.
(ஆ) முதல் மூன்று காலாண்டுகளின் சராசரி.

## 7.3 தொழில்நிலை

தொழில் புரிவோர் என்பதற்கு கொடுப்பனவு இலாபம் அல்லது கொடுப்பனவு வழங்கப்படாமல் குடும்ப நலனுக்காக தரவு சேகரிப்பதற்கு முன்பாக ஒரு வாரத்தில் ஒரு மணித்தியாலம் அல்லது அதற்கு மேல் பணியில் ஈடுபட்டவர் என காலண்டு தொழிற் படை அளவீடுகள் வரைவிலக்கணம் தருகின்றன. தற்காலிகமாக வேலைக்குச் சமூகமளிக்காத ஆளும் தொழிலில் உள்ளவராகவே கருதப்படுவர். ஊழியர்கள், தொழில் கொள்வோர், சுயவேலைவாய்ப்பு, ஊழியர்கள் (சொந்த வேலையாளர்கள்) மற்றும் கொடுப்பனவு எதுவும் செலுத்தப்படாத குடும்ப வேலையாட்கள் ஆகியோர் தொழில் புரிவோரின் விரிவான வகைகளுக்குள் காணப்படுகின்றனர். தொழில்வாய்ப்பானது தொழிற்படையில் 1990 இல் 84.1 சதவீதமாகவிருந்து 1998 மூன்றாம் காலாண்டு முடிவில் 90.9 சதவீதமாக உறுதியாக உயர்வடைந்திருக்கிறது. இதற்கு நேரிணையாக தொழில்வாய்ப்பின்மை தொழிற்படையில் 15.9 சதவீதத்திலிருந்து 9.1 சதவீதமாக இக்காலகட்டத்தில் குறைவடைந்துள்ளது.

தொழில் வாய்ப்பு உருவாக்கத்தின் முக்கிய விடயங்களாக தயாரிப்பு, கட்டடவாக்கம், வர்த்தகம் மற்றும் உல்லாச விடுதி, காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்கள், மற்றும் தனிப்பட்ட சேவைகள் என்பன காணப்படுகின்றன. 1998இல், தொழிற்பாடுகளை ஆரம்பித்த 137 தொழில் முயற்சிகள் உட்பட இலங்கை முதலீட்டுச் சபையின் கீழான தொழில் முயற்சிகள் 36,200 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பை வழங்கியுள்ளன. 1997 இன் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 1998 மூன்றாம் காலாண்டு முடிவில் தயாரிப்புத்துறை ஏறத்தாழ 27,000 புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்கியிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டடவாக்கத்துறையும் கிட்டத்தட்ட 5,400 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியிருந்தது. அரச துறையினால் வழங்கப்பட்ட புதிய வேலைவாய்ப்புக்கள் ஏறத்தாழ 19,000 என மதிப்பிடப்பட்டது. 1998 இன் மொத்த அரசதுறை வேலைவாய்ப்பில் அமைய அடிப்படையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 9.1 சதவீதத்திற்கு வகை கூறினர்.

அட்டவணை 7.3
பொருளாதார நடவடிக்கையின்படியான தொழில்நிலை

| விடயம் | ('000 ஆட்கள்) | | | | | மொத்த ஊழியர்களின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1995 | 1996 | 1997 | 1997(அ) | 1998(அ) | 1996 | 1997(அ) | 1998(அ) |
| கைத்தொழில் வகைப்படி தொழில்நிலை | | | | | | | | |
| வேளாண்மை | 1,966.8 | 2,072.2 | 2,069.1 | 1,971.5 | 2,391.6(ஆ) | 36.7 | 35.4 | 38.2 |
| சுரங்கம் அகழ்தல், கல்லுடைத்தல் | 89.2 | 86.8 | 77.8 | 80.1 | 79.1 | 1.7 | 1.4 | 1.3 |
| தயாரிப்பு | 788.6 | 806.7 | 870.1 | 904.4 | 931.1 | 14.7 | 16.2 | 15.2 |
| வலு, வாயு, தண்ணீர் | 24.9 | 27.5 | 32.3 | 21.6 | 36.5 | 0.5 | 0.4 | 0.7 |
| கட்டடவாக்கம் | 285.5 | 297.1 | 301.0 | 298.9 | 304.3 | 5.3 | 5.4 | 4.6 |
| வர்த்தகம், சுற்றுலா விடுதிகள் | 652.8 | 663.6 | 715.8 | 690.3 | 712.0 | 12.2 | 12.4 | 11.7 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 252.2 | 270.7 | 269.9 | 294.0 | 279.9 | 4.7 | 5.3 | 4.2 |
| காப்புறுதி, உண்மைச் சொத்து | 81.3 | 109.7 | 92.0 | 112.5 | 121.7 | 1.5 | 2.0 | 2.0 |
| தனியாள் பணிகள், ஏனையவை | 1,215.8 | 1,202.9 | 1,151.3 | 1,197.8 | 1,235.3 | 22.7 | 21.5 | 22.1 |
| மொத்தத் தொழில் நிலை | 5,357.1 | 5,537.4 | 5,580.0 | 5,571.4 | 6,085.4(ஆ) | 100 | 100 | 100 |
| தொழிற்படையின் சதவீதம் | 87.7 | 88.7 | 89.6 | 89.6 | 90.9(ஆ) | | | |

(அ) மூன்றாம் காலாண்டு.
(ஆ) தொழிலுள்ள தொழிற்படையின் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்காக இலங்கைத் தொழிற்படை அளவீட்டில் ஏற்படுத்தப்பட்ட வரைவிலக்கண மாற்றம் காரணமாக இத் தரவுகள் முன்னைய ஆண்டுகளுக்கான தரவுகளுடன் ஒப்பிடத்தக்கனவாக இல்லை.

மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

அட்டவணை 7.4
தொழிற்படையும் தொழில் நிலையும்

| விடயம் | (ஆயிரம் ஆட்கள்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 (அ)(ஆ) |
| மொத்தக் குடித்தொகை | 17,619 | 17,865 | 18,136 | 18,315 | 18,552 | 18,774 |
| குடியிருப்பாளர் குடித்தொகை 10 வயதும் அதற்கு மேலும் | 12,278 | 12,493 | 12,736 | 12,831 | 12,864 | 12,896 |
| தொழிற்படை | 6,032 | 6,079 | 6,106 | 6,242 | 6,229 | 6,693 |
| தொழிலிலுள்ளோர் | 5,201 | 5,281 | 5,357 | 5,537 | 5,580 | 6,085 |
| அரசதுறை | 1,295 | 1,325 | 1,307 | 1,161 | 1,080 | 1,091 |
| அரசு | 676 | 700 | 738 | 752 | 762 | 790 |
| அரசுசார் துறை | 619 | 625 | 569 | 409 | 310 | 301 |
| தனியார் துறை | 3,906 | 3,956 | 4,050 | 4,376 | 4,500 | 4,994 |
| மு.சபைத் தொழில் முயற்சிகள் | 180 | 206 | 233 | 242 | 258 | 294 |
| ஏனையவை | 3,726 | 3,750 | 3,817 | 4,134 | 4,242 | 4,700 |
| தொழிலற்றோர் | 830 | 798 | 749 | 705 | 649 | 607 |
| விஞ்ஞாபன விடயங்கள் | | | | | | |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் | 49.1 | 48.7 | 47.9 | 48.6 | 48.4 | 51.9 |
| தொழிலற்றோர் வீதம் % | 13.8 | 13.1 | 12.3 | 11.3 | 10.4 | 9.1 |
| கொடுப்பனவுகளற்ற குடும்ப வேலையாட்கள் நீங்கலான தொழிலற்றோர் வீதம் | 15.1 | 14.3 | 13.4 | 12.4 | 11.4 | 10.3 |

(அ) மூன்றாம் காலாண்டு.
(ஆ) 1998இல் தொழிற்படை மற்றும் தொழில் நிலையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு வேளாண்மைத் துறையில் கொடுப்பனவுகளற்ற பெண் குடும்ப வேலையாட்களை உள்ளடக்கியதனால் ஏற்பட்ட அதிகரிப்பு ஓரளவிற்கு காரணமாகும். துறை ரீதியான பகுப்பாய்வில், இது தனியார்துறை 'ஏனையவை' வகையில் காட்டப்பட்டுள்ளது. எனவே, தனியார் துறையில் 'ஏனையவை' வகையில் உள்ள தொழிற்படை மற்றும் தொழில் நிலையின் மொத்தம் 1998 இற்கும் ஏனைய வருடங்களுக்கிடையில் ஒப்பிடத்தக்கதாக இல்லை.

மூலங்கள்: குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம். இலங்கை மத்திய வங்கி.

வேளாண்மைத்துறையில் தரவுகள் மாறியுள்ள போதும் அவை கிடைக்கப்பெறாததுடன் இத்துறையில் தொழில்புரிவோர் 2.4 மில்லியன் எனவும் இது தொழிற்படையில் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் 38 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. 15 சதவீதத்திற்கு சற்று அதிகமாக தொழில் பெற்றுள்ள தொழிற்படை தயாரிப்புத் துறையில் இருந்த வேளையில் மீதி 47 சதவீதமும் பணிகள் துறையில் இருந்தது. தொழில் உருவாக்கம் நாடு முழுவதிலும் குறிப்பாக சிறியளவிலான வாணிபம் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளில் காணப்பட்டதாக புள்ளிவிபரம் சுட்டிக்காட்டுகிறது.

1998இல் மொத்தத் தொழில் நிலையில் அரச துறையின் பங்கு (அரசு மற்றும் அரசுசார்) தொடர்ந்தும் குறைவடைந்துள்ளது. மொத்த தொழில் நிலையில் அரசதுறையின் பங்கு 1993 இல் 25 சதவீதமாகவிருந்து 1998இல் 18 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. தனியார் துறையின் பங்கேற்புடன் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசதுறைத் தொழில் முயற்சி சீர்திருத்தங்கள் மற்றும் தனியார்துறை பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம் என்பனவற்றின் காரணமாக குறிப்பாக அரசுசார் துறையில் இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பெரும்பகுதியான தொழில் வாய்ப்புக்கள் தனியார்துறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

இப்போக்கு தொகை மதிப்புப்புள்ளி விபரத் திணைக்களத்தினதும் இலங்கை மத்திய வங்கியினதும் அளவீட்டுப் புள்ளி விபரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்

அட்டவணை 7.5
தொழிற்படை நிலைமை

சதவீதம்

| ஆண்டு | அரச துறை ஊழியர் | தனியார் துறை ஊழியர் | தொழில் தருநர் | சுய தொழில் | கொடுப் பனவுக ளற்ற தொழி லாளர் | மொத் தம் |
|---|---|---|---|---|---|---|
| 1990 | 21.5 | 33.7 | 1.8 | 29.2 | 13.8 | 100.0 |
| 1991 | 22.9 | 39.5 | 2.2 | 25.4 | 10.0 | 100.0 |
| 1992 | 20.0 | 40.0 | 1.6 | 27.1 | 11.2 | 100.0 |
| 1993 | 17.4 | 42.8 | 2.0 | 27.4 | 10.4 | 100.0 |
| 1994 | 16.4 | 44.3 | 2.3 | 27.2 | 9.8 | 100.0 |
| 1995 | 15.6 | 44.3 | 2.5 | 28.3 | 9.4 | 100.0 |
| 1996 | 15.0 | 45.8 | 2.3 | 26.8 | 10.0 | 100.0 |
| 1997 | 15.2 | 44.0 | 2.4 | 29.1 | 9.3 | 100.0 |
| 1ஆம் காலாண்டு | 15.0 | 44.7 | 1.7 | 29.0 | 9.7 | 100.0 |
| 2ஆம் காலாண்டு | 15.6 | 44.2 | 2.4 | 27.5 | 10.2 | 100.0 |
| 3ஆம் காலாண்டு | 16.5 | 42.9 | 2.7 | 28.8 | 9.1 | 100.0 |
| 4ஆம் காலாண்டு | 13.7 | 44.3 | 2.7 | 31.2 | 8.2 | 100.0 |
| 1998 (அ) | 13.8 | 41.7 | 2.0 | 28.8 | 13.5 | 100.0 |
| 1ஆம் காலாண்டு | 13.1 | 41.8 | 1.7 | 28.8 | 14.7 | 100.0 |
| 2ஆம் காலாண்டு | 14.4 | 41.6 | 2.3 | 28.7 | 12.9 | 100.0 |

மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்.

(அ) முதல் இரண்டு காலாண்டுச் சராசரி.

பட்டுள்ளது. அரசதுறை தொழில்நிலை 1998இல் 1.09 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன், 1997ஆம் ஆண்டை விட 1.8 சதவீதமான ஒரு சிறிய அதிகரிப்பையே பதிவு செய்தது. அரசதுறையில் தொழில்நிலை (மத்திய மற்றும் உள்ளூராட்சி) 3.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் கடந்த இரு ஆண்டுகளையும்விட கூடியதொரு வீதமாக இருந்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக காணப்பட்ட பெரியளவிலான வீழ்ச்சியை விட அரசுசார் நிறுவனங்கள் குறைந்தளவான 2.9 சதவீத வீழ்ச்சியை அவற்றின் தொழில்நிலை மட்டத்தில் பதிவு செய்தன.

## 7.4 தொழில்வாய்ப்பின்மை

அண்மைய காலங்களில் தொழில் வாய்ப்பின்மை உறுதியாகக் குறைவடைந்து செல்கின்றமையானது நாட்டின் விரைந்த பொருளாதார வளர்ச்சியையும் அதன் விளைவாக தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளமையையும் பிரதிபலிப்பதாக உள்ளது. செய்யத் தொழில் தேடிக் கொண்டிருக்கும் ஆனால் வேலை இல்லாமல் இருக்கும் ஆட்கள் தொழிலற்றவர்கள் எனக் கருதப்படலாம். தொழிலின்மை வீதம் (தொழிற் படையின் வீதமொன்றாக தொழிலற்றிருப்பவர்கள்) 1990 இல் 15.9 சதவீதமாக இருந்து 1998 இன் மூன்றாவது காலாண்டில் 9.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் 6.8 சதவீத புள்ளிகளிலான வீழ்ச்சியொன்றினைப் பதிவு செய்தது. 1998இல் தொழிலின்மை வீதமானது கீழ் நோக்கிய பக்கச் சார்பினைக் கொண்டுள்ளது. கொடுப்பனவு மேற் கொள்ளப்படாத குடும்ப வேலையாட்களும் தொழிற்படையில் தொழிலில் உள்ளோர் எனக் கருதப்படும் தொழிற்படை உள்ளடக்கம் விரிவாக்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணமாகும். கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத குடும்ப வேலை யாட்களை நீக்குவதற்காக தரவுகள் சீராக்கப்படும்போது தொழிலின்மை வீதமானது 1997 இன் 11.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998 இன் மூன்றாம் காலாண்டில் 10.3 சதவீதமாகக் காணப்பட்டது. அதன்படி, 1998இல் உண்மையில் தொழில் இன்மை வீதம் குறிப்பாக 1 சதவீதப் புள்ளியினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அளவீட்டின்படி, ஆண்களின் தொழிலின்மை விகிதத்தைவிட பெண்களின் தொழிலின்மை விகிதம் ஏறத்தாழ இருமடங்குகளாகும். எனினும் நாட்டில் வேலையற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருபாலாரிலும் தொழிலின்மை வீழ்ச்சியைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. ஆண்கள் தொழிலின்மை விகிதம் 1990 இல் 11.8 சதவீதமாக இருந்து 1998 இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் 7.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் 1990 இலிருந்து 1998வரை பெண்களின் தொழிலின்மை விகிதம் 23.4 சதவீதத் திலிருந்து 12.7 சதவீதத்திற்குக் குறைவடைந்துள்ளது. பெண்களுக்கான தொழிலின்மை விகிதம் துரிதமாக

அட்டவணை 7.6
தொழிலற்றோர் வீதம்

| ஆண்டு | தொழிற்படையின் சதவீதம் | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் |
| *1990* | 11.8 | 23.4 | 15.9 |
| *1991* | 10.2 | 23.0 | 14.7 |
| *1992* | 10.7 | 22.9 | 14.6 |
| *1993* | 9.7 | 21.7 | 13.8 |
| *1994* | 9.7 | 20.1 | 13.1 |
| *1995* | 8.8 | 18.8 | 12.3 |
| *1996* | 8.5 | 18.0 | 11.3 |
| *1997* | 7.6 | 16.2 | 10.4 |
| 1ஆம் காலாண்டு | 8.0 | 16.2 | 10.7 |
| 2ஆம் காலாண்டு | 7.2 | 16.3 | 10.2 |
| 3ஆம் காலாண்டு | 7.4 | 16.7 | 10.4 |
| 4ஆம் காலாண்டு | 7.7 | 15.5 | 10.3 |
| *1998 (அ) (ஆ)* | 6.9 | 14.6 | 9.7 |
| 1ஆம் காலாண்டு | 7.1 | 16.2 | 10.6 |
| 2ஆம் காலாண்டு | 6.6 | 14.9 | 9.5 |
| 3ஆம் காலாண்டு | 7.1 | 12.7 | 9.1 |

மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) முதல் மூன்று காலாண்டுச் சராசரி.
(ஆ) தொழிலிலுள்ள தொழிற்படையின் உள்ளடக்கத்தை அதிகரிப்பதற்காக இலங்கைத் தொழிற்படை அளவீட்டில் ஏற்படுத்தப்பட்ட வரைவிலக்கண மாற்றம் காரணமாக இத் தரவுகள் முன்னைய ஆண்டுகளுக்கான தரவுகளுடன் ஒப்பிடத்தக்கனவாகவில்லை.

வீழ்ச்சியடைந்திருப்பதால் தொழிலின்மை தொடர்பாக பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையில் காணப்பட்ட இடைவெளி 1990இல் 12 சதவீத புள்ளிகளாகவிருந்து 1998இல் 6 சதவீத புள்ளிகளாக குறைக்கப்பட்டுள்ளது.

தொழிலின்மையின் அண்மைய போக்கில் காணப்படும் ஒரு முக்கிய பண்பு என்னவெனில் முறைசார் உயர் கல்வித் தகைமையுடையவர்களிடையே தொழிலின்மை வீதம் தொடர்ந்து உயர்வாகக் காணப்படுவதாகும். கடந்த காலங்களில் தொழிலின்மை வீதம் அனைத்துக் கல்வி மட்டங்களிலும் வீழ்ச்சியடைந்த போதிலும் கபொத (உ/த) மற்றும் அதற்கு மேல் தராதரமுடையவர்களிடையே தொழிலின்மை வீதம் மொத்தக் குடித்தொகையின் தொழில் இன்மை வீதத்தினைவிட கணிசமான அளவு உயர்வாகக் காணப்படுகிறது. கபொத (உ/ த ) மற்றும் அதற்கு மேற்பட்ட தராதரமுடைய நபர்களின் விகிதாசாரம் மொத்த தொழிலின்மையில் 1990 இன் 15 சதவீதத்தி லிருந்து 1998இல் 21 சதவீதமாக அதிகரித்தவிடத்து முழுத் தொழிற்படையிலும் இத தராதரங்களையுடைய ஆட்களின் விகிதாசாரமும் 8 சதவீதத்திலிருந்து ஏறத்தாழ 13 சதவீதத்திற்கு மாத்திரம் அதிகரித்தது. வேறுபாடுகள் ஓரளவிற்கு கடுமையாக இல்லாதபோதும் தொழிற்படையில் கபொத (சா/ த) மற்றும் அதற்கு மேற்பட்ட தகைமைகளைக் கொண்டோரைக் கருத்திற் கொள்கையில் இதையொத்த போக்குக் காணப்பட்டது.

இது கல்விசார் தகைமைகளுக்கும் தொழில் வாய்ப்புக்களுக்குமிடையிலான பொருத்தப்பாடற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

தற்போதைய கல்வி முறையே இந் நிலைமைக்கு பெருமளவு காரணமாகும். தற்போதைய கல்வி முறை மரபு வழிப்பாடங்களில் மாணவர்களின் பாட நூல் அறிவைப் பரிசோதிப்பதனை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அதிகரிக்கின்ற போட்டி, மற்றும் இயக்க நிலைவாய்ந்த நவீன வேலைச் சூழலில் பயனுறுதியுடன் பணியாற்றுவதற்கு அது அவர்களைப் போதுமானளவிற்கு பயிற்றுவிக்காது. அதே வேளை, கணக்கீடு மற்றும் நிதி, முகாமைத்துவம், சந்தைப் படுத்தல் மற்றும் கணனியைப் பிரயோகித்தல் போன்ற தொழில்சார் மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் தகைமை பெற்ற ஆட்களுக்கு தோற்றம்பெற்றுவரும் தனியார்துறை தொழிலாளர் சந்தையில் பெருமளவு கேள்வி காணப்படுகின்றது. இதன் விளைவாக, இம்முறையானது அவர்களது போதியதற்ற மரபுவழியான கல்விசார் தகைமைகளினால் நிறைவேற்றப்படமுடியாத எதிர்பார்ப்புக்களை மாணவர்களிடையே உருவாக்குகிறது. அத்தகைய மாணவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டுவிலகியதும் அலுவலக வேலைகளுக்காக காத்திருக்கின்றனர். ஆகவே, தற்போதைய கல்வி முறையின் கீழ் அடையப்பட்ட உள்ளார்ந்த முறைசார்ந்த கல்விசார் தகைமைகள் அத்தகைய தகைமைகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட தொழில் நிலை வாய்ப்புக்களிலும் குறைவாகவே இருக்கும். நாட்டில் உயர் கல்வி பெற்றவர்களிடையே தொழிலின்மைப் பிரச்சனை காணப்படுவதற்கான பின்னணி இதுவேயாகும். தற்போதைய கல்வி சீர்திருத்தங்கள் எதிர்காலத்தில் இப்பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதனையே நோக்காகக் கொண்டிருக்கின்றன.

அட்டவணை 7.7
கல்வி அடிப்படையில் தொழிலற்றோர் வீதம்

| காலம் | தொழிற்படையின் சதவீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பாடசாலை செல்லாதோர் | வகுப்பு 0–4 ஆண்டு 1–5 | வகுப்பு 5–9 ஆண்டு 6–10 | க.பொ.த.(சா.த.) ஜீ.க.பொ.த.ப. | க.பொ.த.(உ.த.) ஜீ.க.பொ.த.ப. | மொத்தம் |
| *1990* | 3.4 | 5.2 | 17.2 | 23.8 | 29.4 | 15.9 |
| *1991* | 4.0 | 4.9 | 14.9 | 25.0 | 24.7 | 14.7 |
| *1992* | 3.5 | 5.4 | 16.1 | 21.8 | 20.7 | 14.6 |
| *1993* | 3.0 | 4.9 | 13.7 | 21.3 | 23.2 | 13.8 |
| *1994* | 2.6 | 5.0 | 13.0 | 19.6 | 23.8 | 13.1 |
| *1995* | 1.9 | 3.0 | 12.8 | 18.4 | 19.9 | 12.3 |
| *1996* | 2.7 | 3.4 | 12.2 | 16.4 | 18.9 | 11.3 |
| *1997* | 1.3 | 2.3 | 10.8 | 15.7 | 19.0 | 10.4 |
| 1ஆம் காலாண்டு | 2.4 | 1.5 | 11.1 | 15.6 | 21.2 | 10.7 |
| 2ஆம் காலாண்டு | 0.2 | 2.2 | 11.0 | 16.1 | 18.9 | 10.2 |
| 3ஆம் காலாண்டு | 0.5 | 3.1 | 10.2 | 14.6 | 19.3 | 10.4 |
| 4ஆம் காலாண்டு | 2.2 | 2.6 | 10.8 | 16.7 | 16.7 | 10.3 |
| *1998* | 0.2 | 2.6 | 10.2 | 13.5 | 16.2 | 9.7 |
| 1ஆம் காலாண்டு | 0.1 | 2.9 | 12.0 | 15.8 | 14.9 | 10.6 |
| 2ஆம் காலாண்டு | 0.5 | 1.9 | 9.1 | 14.4 | 18.9 | 9.5 |
| 3ஆம் காலாண்டு | 0.0 | 3.0 | 9.4 | 10.3 | 14.8 | 9.1 |

மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) முதல் மூன்று காலாண்டுச் சராசரி.

தொழிற்படை அளவீட்டினை அடிப்படையாகக் கொண்ட அண்மைய மதிப்பீடுகள், நாட்டில் மாகாணங்களுக்கிடையே தொழிலின்மையில் வேறுபாடுகள் காணப்பட்டமையை எடுத்துக்காட்டின. தொழிலின்மை வீதம் வடமத்திய மாகாணத்தில் (6.7 சதவீதம்) மிகக் குறைவாக இருந்தவேளையில் உயர்ந்த தொழிலின்மை வீதம் (13.6 சதவீதம்) தென் மாகாணத்தில் காணப்பட்டது.

அட்டவணை 7.8
மாகாண அடிப்படையில் தொழிலற்றோர்

| மாகாணம் | தொழிற்படையின் சதவீதம் | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் |
| மேல் | 9.0 | 14.5 | 10.7 |
| மத்திய | 8.8 | 18.5 | 12.3 |
| தென் | 9.1 | 22.3 | 13.6 |
| வட மேல் | 6.2 | 13.6 | 8.5 |
| வட மத்திய | 4.5 | 11.8 | 6.7 |
| ஊவா | 5.4 | 11.5 | 7.8 |
| சப்பிரகமுவ | 6.2 | 18.0 | 10.0 |
| மொத்தம் | 7.7 | 16.1 | 10.5 |

மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

## 7.5 வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு

இலங்கை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தின்படி, பதிவு செய்யப்பட்ட மூலங்களூடாக வெளிநாடுகளில் தொழில் புரிவதற்காக குடிபெயர்ந்தோர் எண்ணிக்கை 1995 வரை படிப்படியாக அதிகரித்து ஆண்டிற்கு ஏறத்தாழ 172,000 பேரைக் கொண்ட மிக உயர்ந்த மட்டத்தினை அடைந்தது. 1996 மற்றும் 1997 காலப்பகுதியில் வெளி நாட்டுத் தொழில்களுக்காகச் சென்ற மக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்ட வேளையில் இவ்வெண்ணிக்கை 1998இல் ஏறத்தாழ 158,000 பேருக்கு ஏறத்தாழ 7 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. பணியகம் வானூர்தி நிலையத்திலுள்ள அதன் கருமபீடங்களினூடாக அதன் கண்காணிப்பினை தீவிரப்படுத்தியுள்ளமையினால் வெளிநாட்டுத் தொழிலுக்காக குடிபெயரும் ஆட்கள் பணியகத்துடன் சரியான பதிவுகளைக் கொண்டிருப்பர்.

இவ்வாண்டில், அரசாங்கம் வெளிநாட்டிலுள்ள ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும்

தொழிலுககு முன்னான பயிற்சிகளையும் நலன்புரிப் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. 1998 இல் மத்திய கிழக்கு நாடுகளிலும் சிங்கப்பூரிலுமுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் நலன்புரி விடயங்களை கையாளுவ தற்காக 12 நலன்புரி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குடிபெயர்ந்த வேலையாட்களுக்கும் அவர்களது குடும்பங் களுக்கும் பல உதவி வசதிகளை வழங்கியுள்ளது. இவை வெளிநாடு செல்லும் வாய்ப்புள்ள வேலையாட்களுக்கு பயிற்சி வசதிகளை வழங்குதல், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துடன் பதிவு செய்து கொண்டுள்ள குடிபெயர்ந்த வேலையாட்களுக்கு காப்புறுதித்திட்டம் தமது ஒப்பந்த காலம் முடியுமுன் நாடு திரும்பும் ஊழியர்களுக்கு வான் பயணச் சீட்டுக்களை வழங்கல் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் மற்றும் மக்கள் வங்கி மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் குறைந்த செலவு வீடமைப்புத் திட்டங்களுக்கு நிதியளித்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.